# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 03.04.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 17593/SCIC/2023**

திரு ஆ. ஐசக் அருள் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
கன்னியாகுமரி (இ) நாகர்கோவில். --- பொது அதிகார அமைப்பு

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 25.05.2023 தேதியிட்டு, பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், கன்னியாகுமரி என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில், ஜனவரி 2022 முதல் மாவட்டப் பதிவாளராக பதவி வகித்தவர்களின் பெயர், விவரம் மற்றும் அவர்களது பணி விவரம், தற்போதைய மாவட்ட பதிவாளரின் பணி ஆணை நகல் என்பன போன்ற தகவல்களை 8 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் 22.06.2023 மற்றும் 05.07.2023 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் 12.08.2023 தேதியிட்டு பிரிவு 19 (1)-ன்கீழ் முதல் மேல் முறையீட்டு மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலரால் 25.08.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் சட்டப்பிரிவு 19 (3)-ன்கீழ் 06.10.2023 தேதியிட்டு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 17593/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலரால் 11.11.2024 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரால் இனம் 4க்கான தகவல்களை இலவசமாக வழங்க உத்தரவிடுமாறு தெரிவித்து 25.11.2024 தேதியிட்டு ஆணையத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது காணொளிக்காட்சி வாயிலாக விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 03.04.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய காணொளிக்காட்சி விசாரணைக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆஜராகுமாறு தெரிவித்து மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்று கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற காணொளிக்காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. **தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு விதிகள், 2012) விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் வருகையின்மை பதிவு செய்யப்படுகிறது. மனுதாரர் சார்பாக வழக்கறிஞர் ஒருவர் காணொளிக்காட்சி விசாரணைக்கு ஆஜராக வந்திருப்பதாக மாவட்ட ஆட்சியர் அலுவலக ஊழியர் விசாரணையின்போது தெரிவித்த நிலையில், வழக்கறிஞர் மனுதாரருக்கு பதிலாக விசாரணைக்கு ஆஜராக ஆணையத்தால் அனுமதி மறுக்கப்பட்டது. அதன் விவரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக ஊழியர் மூலம் மேற்படி நபருக்கு தெரிவிக்கப்பட்டது.** பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு S. இராஜா, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), மாவட்ட பதிவாளர் அலுவலகம், கன்னியாகுமரி (இ) நாகர்கோவில் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. மனுதாரரால் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு 22.06.2023 05.07.2023, 25.08.2023 மற்றும் 11.11.2024 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக மனுதாரருக்கு

தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் விசாரணையின்போது தெரிவித்தார். மனுதாரர் 25.11.2024 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ள ஆட்சேபனை கடிதத்தில், பொதுத் தகவல் அலுவலரால் தனக்கு இனம் 1 முதல் 3 மற்றும் 5 முதல் 8 வரையிலானவற்றிற்கு தகவல்கள் வழங்கப்பட்டும் இனம் 4க்குரிய தகவல்களைப் பெற கட்டணம் செலுத்துமாறும் தெரிவிக்கப்பட்டதாகவும், அது ஏற்கத்தக்கதல்ல என்றும் குறிப்பிட்டுள்ளார். ஏனெனில் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் பெறும் உரிமைச்சட்ட விதிகளில் குறித்துரைக்கப்பட்ட 30 தினங்களுக்குள் தனக்கு தகவல்கள் வழங்கப்படாத நிலையில், தன்னை இனம் 4க்கு ஆவண நகல்களைப் பெறுவதற்கு கட்டணம் செலுத்தச் சொல்வது ஏற்புடையதல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

5. பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆணையத்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுதாரரால் சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் 25.05.2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு மனு அளிக்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் 11.11.2024 தேதியிட்டு அனுப்பப்பட்ட பதிலில் தான் இனம் 4க்கான தகவல்களைப் பெற உரிய கட்டணம் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு தகவல்களை வழங்குவதில் காலதாமதம் ஏற்றுப்பட்டுள்ளதால், இது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதை ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு சுட்டிக்காட்டுகிறது.

6. எனவே **பொதுத் தகவல் அலுவலர் ஒரு வார காலத்திற்குன் மனுதாரரின் மனுவில் கோரிய இனம்4க்கான தகவல்களை கட்டணமின்றி இலவசமாக ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன் மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அறிக்கையினையும் ஆணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிடப்பட்டு, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிபதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 17593/SCIC/2023</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
கன்னியாகுமரி (இ) நாகர்கோவில்.

**<u>மனுதாரர்:-</u>**
திரு ஆ. ஐசக் அருள்,
கதவிலக்கம் 1/159,
ரூபஸ் மருத்துவமனை சமீபம்,
தென்தாமரைக்குளம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.

Copy to: File TK/PS